**PROCEEDING OF THE PUBIC HEARING MEETING CONDUCTED FOR OBTAINING THE EVIRONMENTAL CLEARANCE FROM THE STATE ENVIRONMENTAL IMPACT ASSESMENT AUTHORITY (SEIAA-TN) FOR PROPOSED MINING PROJECT OF THE UNIT M/S. D. SHANMUGAM ROUGH STONE AND GRAVEL QUARRY SURVEY NUMBERS : 27/4 & 27/5 OVER AN EXTENT OF 1.76.5 HECTARES, NALMUKKAL VILLAGE, MARAKKANAM TALUK, VILLUPURAM DISTRICT.**

**Name of the Project:** Proposed to mining project of Rough stone and Gravel quarry with in an Extent of 1.76.5 Hectares by the unit M/s. D. Shanmugam Rough Stone and Gravel Quarry Survey Numbers : 27/4 & 27/5, Nalmukkal Village, Marakkanam Taluk, Villupuram District.

**Venue:** M/s. V.R.M Mahal A/c, Nadukuppam Road, Siruvadi – Murukeri, Marakkanam Taluk, Villupuram District - 604301

**Date & Time:** 15.07.2025, 12.00 PM – 01.00 PM ,Tuesday

**Present:**

| | | |
|---|---|---|
| 1. | Thiru. K. Raju | Sub Collector (A/c),<br>Tindivanam |
| 2. | Dr.S.Rajendiran | District Environmental Engineer,<br>Tamilnadu Pollution Control Board,<br>Villupuram |
| 3. | Er.S.Elayaraja | Assistant Environmental Engineer,<br>Tamilnadu Pollution Control Board,<br>Villupuram |
| 4. | Er.P.Ramkumar | Assistant Engineer,<br>Tamilnadu Pollution Control Board,<br>Villupuram |
| 5. | Er. M.Sangavi | Assistant Engineer,<br>Tamilnadu Pollution Control Board, |

| | | |
|---|---|---|
| | | Villupuram |
| 6. | Thiru.R.Ramesh | Revenue Inspector,<br>Bramadesam |
| 7. | Thiru.K.Sripathi, | SPL – SI,<br>Brammadesam |
| 8. | Thiru.D.Shanmugam | The proprietor, M/s. D. Shanmugam Rough Stone and Gravel Quarry Survey Numbers : 27/4 & 27/5, Nalmukkal Village, Marakkanam Taluk, Villupuram District |
| 9. | Thiru. M.Shaik Nawas | EIA Consultant<br>M/s. Geo Exploration and Mining Solutions (GEMS),Salem, |
| 10. | Public and Environmentalists | 82 Persons (List Enclosed) |

The District Environmental Engineer (DEE), Tamil Nadu Pollution Control Board, Villupuram District has welcomed the Sub Collector (a/c), Tindivanam, Government Officials, General Public and NGO's/ Environmentalist for the Public hearing and informed that the unit of M/s. D. Shanmugam Rough Stone and Gravel Quarry Survey Numbers : 27/4 & 27/5 Over an Extent of 1.76.5 Hectares, Nalmukkal Village, Marakkanam Taluk, Villupuram District **has proposed to Mining project of Rough stone and Gravel quarry**. This activity attracts Environmental Impact Assessment Notification 2006, as amended under the category "B1" in the schedule 1(a) of the said notification.

Furthermore, the DEE, TNPCB, Villupuram, has informed that the SEIAA-TN issued the Terms of Reference (ToR) with a public hearing for preparing the Environmental Impact Assessment (EIA) report for the aforementioned activity under the Environmental Impact Assessment Notification, 2006 on 03.03.2025. The project proponent has submitted the draft EIA report to the office of the DEE, TNPCB, Villupuram. A public notice for the public hearing, scheduled on 15.07.2025, was published in *The Times of India* and *Dailythanthi* on 11.06.2025 with the approval of

the District Collector, Villupuram. This public hearing is for the proposed industry of M/s. M. Venkadesan Rough Stone and Gravel Quarry, and public announcements have been made via loudspeakers and pamphlets distributed in the surrounding villages.

The District Environmental Engineer has informed that the details of the proposed project and the Environmental Impact Assessment (EIA) study conducted by the EIA consultant will be explained through a PowerPoint presentation by the project proponent/EIA consultant. Furthermore, the DEE stated that after the presentation, the public can express their views, suggestions, and comments on the project, either verbally or in writing, one by one. Additionally, he informed that the opinions and suggestions of the public and environmentalists will be recorded and forwarded to the SEIAA-TN.

The Sub Collector (a/c), Tindivanam requested the project proponent to explain the detail of the project and the EIA study conducted by them to the public in detail.

The project proponent explained the summary of the project and informed that on behalf of the project proponent EIA Co-ordinator will explain about the project.

The representative of project proponent explained the summary of the project and informed that on behalf of the project proponent Mr. D. Shanmugam , Proprietor of the M/s. D. Shanmugam Rough Stone and Gravel Quarry Explained about the project and he welcomed the District Collector, the District Environmental Engineer, General Public, Environmentalists and other Government Officials and explained the details of the project with help of power point presentation.

The Sub Collector (a/c), Tindivanam has invited members of the public to present their views, suggestions, or comments regarding the above said proposal/project in a detailed and organized manner. Participants may express their opinions either verbally or in writing. Before presenting, individuals are kindly requested to provide their full name and address for official records.

1. **Thiru. Sivanatham, Vadanerkunam Village:**
   - He emphatically stated that the proposed quarry site located within 5 to 6 km distance from his village and he said that it would significantly boost

employment opportunities for the village residents, especially benefiting the daily wage earners by providing them with stable and consistent work.

- He stated that working outside the village earns him ₹30,000, but ₹20,000 goes toward expenses. Working locally would reduce costs significantly, and as a small farmer, he could also manage his agricultural work.
- He added that the quarry would improve the local economy, provide jobs for over 100 people, benefit around 100 families, and expressed full support for the project.

2. **Thiru. Manavalan, Enthoor Village:**
   - He mentioned that he lives approximately 1.5 kilometers from the proposed project site. He said that he leaves for work at 9 a.m. and returns by 4 p.m which allows him to also care for his aging parents.
   - He further stated that workers employed in nearby villages often purchase food from local eateries, and as a result, this project would help enhance the livelihoods of several families. Hence, he expressed his support for the project.
3. **Thiru. Parthiban, Kilarugunam:**
   - He mentioned that he is employed as a driver, and the implementation of this project would ensure continued job opportunities for him. He also said that the project would contribute to the improvement of livelihoods for families in the surrounding area. Hence, he expressed his support for the project.
4. **Thiru. Nesakumar, Kattalai Village:**
   - He mentioned that he had earlier worked in Chennai, where he earned ₹30,000 per month. However, out of that, around ₹20,000 was spent on living expenses, leaving only ₹10,000 to send home. With this project coming up nearby, he would have the opportunity to work closer to home, allowing him to retain most of his earnings as profit. He also added that this would help him manage his agricultural work as well. Hence, he expressed his support for the project.

5. **Thiru. Murali, Senalur Village:**
   - He stated that the proposed quarry site is located within 2 km distance from his village and also he said that more than 60 peoples were the operators and they are fully dependent on the proposed quarry for their livelihood.
   - However, they also requested that adequate environmental safeguards be ensured, including planting more trees around the quarry site and operating the quarry without causing any disturbance to the environment.
   - Additionally, he requested that regular water spraying be carried out to control dust and minimize air pollution, and emphasized the need for the quarry to function in an environmentally responsible manner.
6. **Thiru.G.Balamurugan, Kilarugunam Village:**
   - The speaker introduced himself as a resident of Keel Arungunam and the proprietor of M/s. Lakshmi Blue Metals. He highlighted a significant imbalance in the local resource chain, noting that while approximately 150 crusher units operate in the region, there are only about 10 functioning quarries. This disparity has led to a severe shortage of raw materials, restricting his unit to a mere two or three loads per day—barely enough to sustain operations.
   - Emphasizing the national importance of construction materials, he referenced the Hon'ble Prime Minister Shri Narendra Modi's vision of a hut-free India, under the "Housing for All" initiative. He underlined that essential materials used in constructing homes and laying roads—such as stone aggregates—originate from these quarries, making them vital for infrastructure development.
   - The speaker further drew attention to the socioeconomic implications of the quarry and crusher industry in the region. He estimated that nearly one lakh people across Marakkanam and Tindivanam Taluks depend on this sector for their livelihood, either directly or indirectly. In the absence of large-scale industries, these operations form the economic backbone for many families in the area.
   - While he acknowledged that establishing a quarry might inconvenience a handful of nearby residents—possibly affecting around 5 to 10

individuals—he argued that the broader benefits, particularly in employment and regional development, far outweigh these localized concerns.

- He also cited improvements in local infrastructure as a direct outcome of quarry-related activities. Where poor road conditions once made short journeys an hour-long ordeal, upgraded roads have now reduced travel time to just 15 minutes. This advancement, he noted, has had a particularly profound impact on emergency medical services, enabling ambulances to reach patients more swiftly.
- In closing, the speaker expressed his strong support for the proposed quarry project, underscoring the economic, social, and infrastructural advantages it offers to the region.
- He concluded by stating that quarries play a vital role in infrastructure development and should be recognized as essential to progress.

**The following 28 members of the public have expressed their opinion in writing are as:**

| S.No | Name & Place | Comment |
|---|---|---|
| 1 | Thiru / Thirumathi SNBCS Society for Nature and Biodiversity Conservation<br>Registration No.: 331/2022<br>3-32, Musalipedu Village,<br>Kandadu Post,<br>Yerpedu Mandal,<br>Tirupati District – 517619,<br>Andhra Pradesh. | He/She has expressed support for the proposed project and has requested that the project proponent adopt proper air pollution control measures and operate the unit in an environmentally sustainable manner to achieve green development. |
| 2 | Mr. S. K. Karimmulla, President<br>Save Green Save Environmental India<br>Registration No.: 425/2015<br>8-2-4, Gajimanyam, | He has expressed his support for the proposed project and emphasized that it should promote green development. He also mentioned that the project should provide opportunities for youth |

| | | |
|---|---|---|
| | Ibrahimpatnam,<br>NTR Krishna District,<br>Andhra Pradesh – 521456. | employment, conduct medical camps, and ensure that the CSR funds are utilized for the benefit of the local people. |
| 3 | Mr. T. Anil Reddy, President, NGO<br>Green Innovation Natural & Environmental Society<br>Registration No.: 492/2023<br>5-7-74, APHB Colony,<br>Karimnagar,<br>Telangana – 505001. | He has expressed his support for the proposed project and emphasized the need to achieve green development. He also stated that the project should create employment opportunities for the youth, organize medical camps, and ensure that CSR funds are utilized for the benefit of the local community. |
| 4 | Mr. S. Ankayya<br>Sathyaveedu Constituency "SEZ" Farmers & A.G. Labourers Production & Development Association | He has expressed his support for the proposed project and emphasized the need to promote green development. He also mentioned that the project should generate employment opportunities for the local youth, organize medical camps, and ensure that the CSR funds are utilized for the benefit of the local community. |
| 5 | Mr. P. Hasarathayya<br>Society for Development Action<br>Registration No.: 353/1994<br>Jirravaripalem, Kaligiri,<br>SPSR Nellore District,<br>Andhra Pradesh – 524224. | He has expressed his support for the proposed project and emphasized the importance of achieving green development. He also stated that the project should provide employment opportunities for local youth, conduct medical camps, and ensure that CSR funds are utilized for the benefit of the local community. |
| 6 | Mr. Katta Yadagiri<br>Environmental Society NGO<br>Praja Samasyalu Parishkara Vedika | He has expressed his support for the proposed project and emphasized the importance of achieving green |

| | | |
|---|---|---|
| | 2-59-1, Chinnasuraram, Mandal,<br>Nalgonda District,<br>Telangana. | development. He also stated that the project should generate employment opportunities for local youth, conduct medical camps, and ensure that the CSR funds are utilized for the benefit of the local community. |
| 7 | Mr. M. Sudhakar, Secretary<br>Integrated Human Development Welfare Society<br>Registration No.: 350/1996<br>UCO Nagar, Muthukur Road, 16th Division,<br>Nellore District,<br>Andhra Pradesh – 524003 | He has expressed his support for the proposed project and emphasized the importance of achieving green development. He also stated that the project should create employment opportunities for local youth, conduct medical camps, and ensure that the CSR funds are utilized for the benefit of the local community. |
| 8 | Mr. D. Malardhavan, District Coordinator<br>Bharathiya Nagarika Seva Sangam<br>No. 43/15, Pudhumani Kuppam, 4th Street,<br>Royapuram, Chennai – 600013. | They expressed their support for the proposed project and requested that 10% of the total revenue be allocated for development schemes benefiting the local community. He also urged that employment opportunities be provided to educated and semi-educated rural youth to improve their livelihoods. |
| 9 | Mr. M. Muthu Raja, District Coordinator<br>Bharathiya Nagarika Seva Sangam<br>Registration No.: 301/2009<br>4, Perumal Nagar Street,<br>Kamuthi, Ramanathapuram District – 623603. | |
| 10 | Mr. A.P. Rajendran, Founder and President<br>Bharathiya Nagarika Seva Sangam<br>Registration No.: 301/2009<br>Krishnagiri Colony, Anjimedu Post, | |

| | | |
|---|---|---|
| | Yerpedu Mandal, Tirupati District – 517619. | |
| 11 | Mr. P. Muthukumar, District Coordinator<br>Bharathiya Nagarika Seva Sangam<br>Registration No.: 301/2009<br>169, North Street, Kanisapakkam,<br>Panruti Taluk,<br>Cuddalore District – 607106. | |
| 12 | Mr. V. Manikandan, City Coordinator<br>Bharathiya Nagarika Seva Sangam<br>Registration No.: 301/2009<br>7, Rasack Layout, 4th Street,<br>Keelperumpakkam,<br>Villupuram District – 605602. | |
| 13 | Mr. V. Suresh, City Deputy Coordinator<br>Bharathiya Nagarika Seva Sangam<br>Registration No.: 301/2009<br>7, Rasack Layout, 4th Street,<br>Keelperumpakkam,<br>Villupuram District – 605602. | They expressed their support for the proposed project and requested that 10% of the total revenue be allocated for development schemes benefiting the local community. He also urged that employment opportunities be provided to educated and semi-educated rural youth to improve their livelihoods. |
| 14 | Mr. M. Sivanathan, District Coordinator<br>Bharathiya Nagarika Seva Sangam<br>Registration No.: 301/2009<br>7, Rasack Layout, 4th Street,<br>Keelperumpakkam,<br>Villupuram District – 605602. | |
| 15 | Mr. B. Subbaramaiah,<br>Secretary and Director<br>Rural Upliftment Network Society (RUN Society), NGO, | He has expressed his support for the proposed project and emphasized the need to achieve green development. He also requested that the project |

| | | |
|---|---|---|
| | Tirupati. | proponent properly implement air pollution control measures and operate the unit in an environmentally responsible manner. |
| 16 | Mrs. Vanitha Soundar<br>President, Village Panchayat<br>Nalmukkal Panchayat,<br>Marakkanam Taluk,<br>Villupuram District. | They expressed their support for the project, stating that if the project is established, it would not only create employment opportunities for the local people but also make construction materials available to the residents of the area at affordable prices. |
| 17 | Mr. Parthiban<br>Keel Arungunam Village,<br>Perumukkal Post,<br>Marakkanam Taluk,<br>Villupuram District | |
| 18 | Thiru.Siva, senalur Village,<br>Marakkanam Taluk,<br>Villupuram District | |
| 19 | Thiru.M.Manikandan, Kilarugunam Village, Marakkanam Taluk,<br>Villupuram District | |
| 20 | Thiru. Murali, Senalur Village, ,<br>Marakkanam Taluk,<br>Villupuram District | |
| 21 | Thiru. E.Praveen kumar,<br>Kilarugunam Village, Marakkanam Taluk,<br>Villupuram District | |
| 22 | Thiru. Nandhakumar, Kilarugunam Village, Marakkanam Taluk,<br>Villupuram District | |
| 23 | Thiru.R. Suresh, Senalur Village,<br>Marakkanam Taluk,<br>Villupuram District | |

| | | |
|---|---|---|
| 24 | Thiru. Kalidass, Perumukkal Village, Marakkanam Taluk, Villupuram District | |
| 25 | Thiru.P.Sivalingam,S/o.Perumal, Vadanerkunam village, Marakkanam Taluk, Villupuram District | |
| 26 | Thiru. Kannan,Azhagiyapakkam Village, Marakkanam Taluk, Villupuram District | |
| 27 | Thiru. Ganesan, Perumukkal Village, Marakkanam Taluk, Villupuram District | |
| 28 | Thiru.Jayaselan, Perumukkal Village, Marakkanam Taluk, Villupuram District | |

**Thereafter no views/comments were raised.**

**The District Environmental Engineer, TNPCB, Villupuram.**

Finally the DEE, TNPCB, Villupuram summarized views, suggestion and responses of the public about the Project and also informed that the said views, suggestion and responses of the public are recorded through video-graphy and the same will be sent to the State Environmental Impact Assessment Authority, Tamilnadu along with the written representation received from the Public.

Furthermore, the DEE, TNPCB, Villupuram has informed that as per the public notice in the newspaper for this project the proceeding of the public hearing will be made displayed at the District Collectorate Office - Villupuram, Marakkanam Panchayat Union office, Marakkanam Taluk office, Nalmukkal Village Panchayat Office and Office of the District Environmental Engineer, TNPCB, Vilupuram, and also in the TNPCB website of www.tnpcb.gov.in after the said public hearing. Commands, if any, on the proceeding may be sent directly to the regulatory authorities (Member

Secretary, State Environmental Impact Assessment Authority –TamilNadu / MoEF&CC) and the applicant concerned.

| District Environmental Engineer,<br>Tamilnadu Pollution Control Board,<br>Villupuram | Sub Collector (a/c)<br>Tindivanam |
|---|---|

**Enclosures:**

1. Copy of press release (Public Notice published in the daily Newspaper Tamil & English dated 11.06.2025 for notifying the public hearing meeting.
2. Attendance sheet at the public hearing (Total pages 16 & 82 Persons).
3. Audio & Video stored in the Pen drive of the public hearing proceedings.
4. Photographs of the public hearing proceedings.
5. Soft and Hard copies of EIA Report, Executive Summary in English & Tamil, submitted by the Project Proponent.
6. Petitions received from the public / NGO / Environmentalist through E-mail, Postal and in the public hearing meeting – 28 Nos.

**விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் வட்டம், நல்முக்கல் கிராமம், சர்வே. எண்கள் 27/4 மற்றும் 27/5 ல் 1.76.50 ஹெக்டேர் பரப்பளவில் தி/ள் D. சண்முகம் சாதாரண கல் மற்றும் சரளை குவாரி உத்தேசிக்கப்படுவது குறித்து மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்தின் சுற்றுச்சூழல் அனுமதி பெறுதல் தொடர்பாக நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்ட நடவடிக்கையின் விபரங்கள்**

| | |
|---|---|
| **திட்டத்தின் பெயர்:** | விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் வட்டம், நல்முக்கல் கிராமம், சர்வே. எண்கள் 27/4 மற்றும் 27/5 ல் 1.76.50 ஹெக்டேர் பரப்பளவில் தி/ள் D. சண்முகம் சாதாரண கல் மற்றும் சரளை குவாரி நிறுவப்படவுள்ளது. |
| **இடம்:** | தி/ள் வி.ஆர்.எம் மஹால் A/C, நடுக்குப்பம் சாலை, சிறுவாடி - முருக்கேரி, மரக்காணம் வட்டம், விழுப்புரம் மாவட்டம் – 604301. |
| **நாள் மற்றும் நேரம் :** | 15/07/2025 - காலை 12.00 மணி முதல் – மதியம் 1.00 மணி வரை. |

**பங்கேற்றோர்:**

**திருவாளர்கள்**

| | | |
|---|---|---|
| 1. | திரு. கே. ராஜு | சார் ஆட்சியர் (கூ.பொ), திண்டிவனம். |
| 2. | Dr.செ.இராசேந்திரன், | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>விழுப்புரம். |
| 3. | திரு. S. இளையராஜா, | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>விழுப்புரம். |
| 4. | திரு. P. ராம்குமார், | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>விழுப்புரம். |
| 5. | திரு. M. சங்கவி, | உதவி பொறியாளர், |

| | | |
|---|---|---|
| | | தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>விழுப்புரம். |
| 6. | திரு. R. ரமேஷ், | வருவாய் ஆய்வாளர்,<br>பிரம்மதேசம். |
| 5. | திரு. எம். ஷேக் நவாஸ், | EIA Consultant,<br>தி/ள். ஜியோ எக்ஸ்புளோரேஷன் அன்ட் மைனிங் சொலுஷன்ஸ்,<br>அழகாபுரம் , சேலம் - 636 004. |
| 8. | திரு. D. சண்முகம் | உரிமையாளர்,<br>தி/ள். D. சண்முகம் சாதாரண கல் மற்றும் சரளை குவாரி, பெருமுக்கல் கிராமம். |
| 7. | பொதுமக்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் | (82 நபர்களின் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது) |

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விழுப்புரம் அவர்கள் சுற்றுச்சூழல் அனுமதிபெறும் பொருட்டு நடைபெறும் பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு தலைமை வகிக்கும் மதிப்பிற்குரிய சார் ஆட்சியர் (கூ.பொ), திண்டிவனம் அவர்களையும், பங்கேற்கவந்துள்ள பொதுமக்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், பிற துறையைச் சேர்ந்த அரசு அதிகாரிகள் அனைவரையும் வரவேற்று விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் வட்டம், நல்முக்கல் கிராமம்., தி/ள். D. சண்முகம் சாதாரண கல் மற்றும் சரளை குவாரி, சர்வே. எண்கள் 27/4 மற்றும் 27/5ல் 1.76.50 ஹெக்டேர் பரப்பளவில் நிறுவப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்து கீழ்க்கண்ட விபரங்களையும் தெரிவித்தார்.

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை 2006ன்படி வகை B1 மற்றும் அட்டவணை 1(a) இன் கீழ் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டத்தின் செயல்பாட்டிற்கான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையை மக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் நடத்தி தயாரிப்பிற்கான குறிப்பு விதிமுறைகளை Terms of Reference (TOR) 03.03.2025 அன்று வழங்கியுள்ளது.

மேலும், நிறுவனம் வரைவு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தயாரித்து பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் நடத்த தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திடம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க இப்பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டம் நடைபெறவிருக்கிறது.

இதுதொடர்பாக, மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலின் படி, திரு. D. சண்முகம் சாதாரண கல் மற்றும் சரளை குவாரி நிறுவனத்திற்கு பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டமானது விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் வட்டம், சிறுவாடி – முருக்கேரி, நடுக்குப்பம் சாலை, திரு வி. ஆர். எம் A/c மஹாலில் 15.07.2025 அன்று காலை 12.00 மணி முதல் 1.00 மணி வரையில் நடைபெறும் என்று "டைம்ஸ் ஆப் இந்தியா" மற்றும் "தினத்தந்தி" ஆங்கில மற்றும் தமிழ் நாளேடுகளில் 11.06.2025 அன்று பொது அறிவிப்பு வெளியிடப்பட்டது. மேலும் அப்பகுதியிலுல்ல மக்களுக்கு இத்தகவல் ஒலிபெருக்கி மற்றும் துண்டுப்பிரசுரம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மாவட்ட சுற்றுசூழல் பொறியாளர், இக்கூட்டத்தில் திரு. D. சண்முகம் சாதாரண கல் மற்றும் சரளை குவாரி நிறுவனத்தின் EIA Consultant, திரு. ஜியோ எக்ஸ்புளோரேஷன் அன்ட் மைனிங் சொலுஷன்ஸ், சேலம் அவர்கள் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு சம்பந்தமான விவரங்களை விரிவாக எடுத்துரைப்பார்கள் என்று கூறினார். அதன் பின்னர் பொதுமக்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் தங்களது கருத்துகளை வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ பொதுமக்கள் தங்கள் பெயர், ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார். தங்களுடைய கருத்துக்கள் முறையாக பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என தெரிவித்தார்.

சார் ஆட்சியர் (கூ.பொ), திண்டிவனம் அவர்கள் இத்திட்டத்தின் விவரம் மற்றும் திட்டத்தின் நிர்வாகத்தினரால் நடத்தப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை தொடர்பான விவரங்களையும் பொதுமக்களுக்கு விளக்கும் படி கேட்டுக்கொண்டார் .

திரு. எம். ஷேக் நவாஸ் (EIA Consultant), தி/ள். ஜியோ எக்ஸ்புளோரேஷன் அன்ட் மைனிங் சொலுஷன்ஸ், சேலம் அவர்கள் உதவி ஆணையர் (கலால்) மற்றும் சார் ஆட்சியர், திண்டிவனம் (கூ.பொ) அவர்களுக்கும், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களுக்கும், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், பிற துறையைச் சேர்ந்த அரசு அதிகாரிகள் மற்றும் பங்கேற்க வந்துள்ள பொதுமக்கள் அனைவரையும் வரவேற்று நிழற்பட விளக்க காட்சி மூலம் உத்தேசிக்கப்பட்டுள்ள தொழிற்திட்டம் பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

சார் ஆட்சியர் (கூ.பொ), திண்டிவனம் அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ, வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துகள் பதிவு செய்யும் முன் பொதுமக்கள் தங்கள் பெயர், தங்கள் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு கருத்துக்களை தெரிவிக்கலாம் என்று தெரிவித்தார்.

அதன்படி பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை கீழ்க்கண்டவாறு தெரிவித்தனர்.

**1, திரு. சிவானந்தன், வடநெற்குணம் கிராமம்**

- இவர் கூறுகையில், உத்தேசிக்கப்பட்டுள்ள இத்திட்டம் எங்கள் ஊரில் இருந்து சுமார் 5 முதல் 6 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. எங்கள் ஊரில் உள்ள மக்கள் பெரும்பாலும் குவாரி தொழிலை நம்பி தான் உள்ளனர்கள். அவர்கள் வெளியூரில் சென்று வேலை செய்தால் 30000 ரூபாய் வருவாய் ஈட்டினாலும் அவற்றில் 20000 ரூபாய் செலவு ஆகிவிடும் ஆனால் உள்ளூரிலேயே வேலை புரிந்தால் செலவு மிகவும் குறைவு என்றும், நாங்கள் குறு விவசாயிகளாக உள்ளதால், நாங்கள் அதனையும் பார்த்துக் கொள்வோம். ஆகையால்

இத்திட்டத்திற்கு அனுமதி வழங்குவது குறித்து எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று கூறி தனது ஆதரவை தெரிவித்தார்.

**2. திரு. மணவாளன், ஏந்தூர் கிராமம்,**

- இவர் கூறுகையில், தான் உத்தேசிக்கப்பட்டுள்ள இத்திட்டத்தின் இடத்தில் இருந்து சுமார் 1.5 கிலோமீட்டர் தொலைவில் வசித்து வருவதாகவும், தான் வேலைக்கு காலை 9 மணிக்கு சென்று மாலை 4 மணிக்கு வீடு திரும்புவதாகவும், தன் பெற்றோர்களையும் பாதுகாக்க ஏதுவாக உள்ளது என்றும் கூறினார். சுற்றியுள்ள ஊர்களில் இயங்கும் ஓட்டல்களில் பணிபுரிபவர்களுக்கு உணவு வாங்குவதனால், பல குடும்பங்களின் வாழ்வாதாரம் இத்திட்டத்தால் மேம்பாடு அடையும் என்று கூறி தனது ஆதரவை தெரிவித்தார்.

**3. திரு. பார்த்திபன், கீழ் அருங்குணம் கிராமம்,**

- இவர் கூறுகையில், தான் ஓட்டுநராக பணி புரிந்து வருவதகாவும், இத்திட்டம் அமைந்தால் தனக்கு வேலை கிடைக்கும் என்றும், அருகில் உள்ள குடும்பங்களின் வாழ்வாதாரம் மேம்பாடு அடையும் என்று கூறி இத்திட்டத்திற்கு தனது ஆதரவை தெரிவித்தார்.

**4. திரு. நேசகுமார், கட்டளை கிராமம்,**

- இவர் கூறுகையில், தான் இதற்கு முன் சென்னையில் பணி புரிந்து வந்ததாகவும், அப்போது 30000 ரூபாய் வருவாய் ஈட்டினாலும் அவற்றில் 20000 ரூபாய் செலவு ஆகிவிடும் 10000 ரூபாய் மட்டும் தான் வீட்டில் அளிப்பேன் என்றும், இத்திட்டம் அமைவதனால் எங்களுக்கு அருகிலேயே வேலை கிடைக்கும், சம்பாதிக்கும் மொத்த தொகையும் தனக்கு லாபம் என்றும், விவசாயமும் பார்த்துக் கொள்வதற்கு ஏதுவாக இருக்கும் என்று கூறி இத்திட்டத்திற்கு தனது ஆதரவை தெரிவித்தார்.

**5 திரு. முரளி, சேனலூர் கிராமம்,**

- இவர் கூறுகையில், எங்கள் ஊர் இத்திட்டம் அமைய உள்ள இடத்தில் இருந்து சுமார் 2 கிலோமீட்டர் தூரத்தில் அமைந்துள்ளளது. எங்கள் ஊரில் 60க்கும் மேற்ப்பட்ட ஆப்ரேட்டர்கள் உள்ளனர் இந்த குவாரி தொழிலை நம்பி உள்ளனர்கள்.
- தான் ஒரு வேண்டுகோள் வைப்பதாவும், இயற்கைக்கு நாம் எவ்வித பாதிப்பு ஏற்படுத்தினால் அதனை ஈடு செய்யும் வகையில் சுற்றுச்சூழலை வளர்க்க வேண்டும் என்றும், கட்டுமானப் பொருட்கள் உற்பத்திக்காக நாம் இதனை செய்கிறோம், அதற்கு ஈடு செய்யும் வகையில் தரிசு நிலங்களில் நிறைய மரக்கன்றுகளை நட்டு, தூசு பரவலை தடுத்து நிறுத்தலாம் எனக் கூறி, இத்திட்டத்திற்கு தனது ஆதரவை தெரிவித்தார்.

**6 திரு. G. பாலமுருகன், குருவம்மாபேட்டை கிராமம்,**

- இவர் கூறுகையில், தான் கீழ்அருங்குணம், தி/ள் லட்சுமி புளு மெட்டல்ஸ் நிறுவன உரிமையாளர் என்றும், எங்கள் ஊரில் சுமார் 150 கிரசர்கள் உள்ளன என்றும், ஆனால் குவாரிகள் சுமார் 10 எண்ணிக்கையில் குறைந்த அளவே உள்ளன என்பதனால் தங்களுக்கு 2 முதல் 3 லோடு தான் தினமும் கிடைக்கிறது என்று கூறினார்.
- இக்காலத்தில் குடிசை இல்லா இந்தியாவாக மாற்றியமைக்க மாண்புமிகு பாரத பிரதமர் மோடி அவர்களின் திட்டத்தை செயல்படுத்த கட்டுமான பொருட்கள் மிகவும் அவசியம் என்று கூறினார்.. மேலும், வீடு கட்டுவதற்கும், சாலை அமைப்பதற்கும் மூல பொருட்களாக அமைவது குவாரியின் மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருட்களே ஆகும்.

- மரக்காணம் மற்றும் திண்டிவனம் வட்டத்தில் உள்ள மக்களுக்கு இந்த குவாரி மற்றும் கிரசர்கள் மூலம் சுமார் ஒரு லட்சம் நபர்களுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று தெரிவித்தார்.
- மேலும், இங்கு எந்த விதமான தொழிற்சாலைகளும் இல்லை. பெரும்பாலும் உள்ள இந்த கிரசர் தொழிலையே மூலதனமாக நம்பி உள்ளனர்கள்.
- ஒரு குவாரி அமைவதனால் அருகில் உள்ள நிலமும், ஐந்து முதல் பத்து பேர் பாதிப்படைவது உண்மை தான். ஆனால் லட்சம் பேருக்கு பயன் உள்ளதாக அமைகிறது,
- முன்பு ரோடு வசதி சரியில்லாத போது, சுமார் 1 மணி நேரம் எடுத்துக் கொள்ளக்கூடிய பயண நேரம் தற்போது மேம்படுத்தப்பட்ட சாலை வசதிகள் மூலமாக வெறும் 15 நிமிடங்களாக குறைந்து உள்ளது. அவசர காலகட்டத்தில் ஆம்புலன்ஸ் மூலம் உடனடி சிகிச்சை பெறுவதற்கும் பெரும் உதவியாக உள்ளது. இவைகளுக்கு மூலதனமாக உள்ளது இந்த குவாரி மற்றும் கிரசர்களே ஆகும் என்று குறிப்பிட்டு தனது ஆதரவை தெரிவித்தார்.

**<u>கீழ்க்கண்ட இருபத்து எட்டு பொதுமக்கள் தங்கள் கருத்தை எழுத்துப்பூர்வமாகத் தெரிவித்துள்ளனர்.</u>**

| வ.எண் | பெயர் மற்றும் ஊர் | கருத்து |
|---|---|---|
| 1. | திரு/ள் SNBCS சொசைட்டி பார் நேச்சர் அன்ட் பயோடைவர்சிட்டி கன்சர்வேஷன்,<br>பதிவு எண். 331/2022<br>3-32 முசலிப்பேடு கிராமம், கன்டாடு அஞ்சல், எர்பேடு மண்டல்,<br>திருப்பதி மாவட்டம் – 517619. | இவர் முன்மொழியப்பட்ட திட்டத்திற்கு தனது ஆதரவைத் தெரிவித்ததுடன், பசுமை அபிவிருத்தி எய்திடவும், திட்டத்தின் உரிமையாளர் முறையாக காற்று மாசு தடுப்பு சாதனைங்களை பயன்படுத்தி இயக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார். |

| | | |
|---|---|---|
| 2. | திரு. S K கரிமுல்லா, தலைவர்,<br>தி/ள் சேவ் கிரீன் சேவ்<br>என்விரோன்மெண்டல் இந்தியா,<br>பதிவு எண். 425/2015<br>8-2-4 கஜிமன்யம், இப்ராஹிபட்டினம், NTR கிருஷ்ணா மாவட்டம், ஆந்திர பிரதசம் - 521456. | இவர் முன்மொழியப்பட்ட திட்டத்திற்கு தனது ஆதரவைத் தெரிவித்ததுடன்,பசுமை அபிவிருக்தி எய்திடவும், திட்டத்தின் இளைஞர் வேலைவாய்ப்பு, மருத்துவ முகாம், CSR நிதியினை உள்ளூர் மக்களுக்கு பயன் பெற வழிவகை செய்திட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். |
| 3. | திரு. T அணில் ரெட்டி, தலைவர் NGO,<br>தி/ள் கிரீன் இனோவேஷன் நேச்சுரல் &<br>என்விரோன்மெண்டல் சொசைட்டி,<br>பதிவு எண். 492/2023<br>5-7-74 APHB காலனி, கரீம்நகர்,<br>தெலுங்கானா - 505 001. | இவர் முன்மொழியப்பட்ட திட்டத்திற்கு தனது ஆதரவைத் தெரிவித்ததுடன், பசுமை அபிவிருக்தி எய்திடவும், திட்டத்தின் இளைஞர் வேலைவாய்ப்பு, மருத்துவ முகாம், CSR நிதியினை உள்ளூர் மக்களுக்கு பயன் பெற வழிவகை செய்திட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். |
| 4. | திரு. S அன்கையா,<br>தி/ள் சத்யவீடு கான்ஸ்ட்டுயன்4 "SEZ" பார்மர்ஸ் & A.G. லேபரர்ஸ் ப்ரோடக்ஷன் & டெவலப்மண்ட் அசோசியேஷன். | இவர் முன்மொழியப்பட்ட திட்டத்திற்கு தனது ஆதரவைத் தெரிவித்ததுடன், பசுமை அபிவிருக்தி எய்திடவும், திட்டத்தின் இளைஞர் வேலைவாய்ப்பு, மருத்துவ முகாம், CSR நிதியினை உள்ளூர் மக்களுக்கு பயன் பெற வழிவகை செய்திட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். |
| 5. | திரு. P ஹசரததையா,<br>தி/ள் சொசைட்டி பார் டெவலப்மென்ட் ஆக்ஷன், பதிவு எண். 353/1994<br>ஜிர்ராவரிபேலம், கலிகிரி,<br>SPSR நெல்லூர் மாவட்டம், -<br>ஆந்திர பிரதேசம் - 524 224. | இவர் முன்மொழியப்பட்ட திட்டத்திற்கு தனது ஆதரவைத் தெரிவித்ததுடன், பசுமை அபிவிருக்தி எய்திடவும், திட்டத்தின் இளைஞர் வேலைவாய்ப்பு, மருத்துவ முகாம், CSR நிதியினை உள்ளூர் மக்களுக்கு பயன் பெற |

| | | |
|---|---|---|
| | | வழிவகை செய்திட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். |
| **6.** | திரு. கட்ட யாதகிரி,<br>தி/ள் என்விரோன்மெண்டல்<br>சொசைட்டி என்ஜிவோ,<br>பிரஜ சமஸ்யலு பரிஷ்கர வேதிகா,<br>2-59-1 சின்னசுரமம், மண்டல்,<br>நல்கொண்டா மாவட்டம், தெலுங்கானா. | இவர் முன்மொழியப்பட்ட திட்டத்திற்கு தனது ஆதரவைத் தெரிவித்ததுடன், பசுமை அபிவிருக்தி எய்திடவும், திட்டத்தின் இளைஞர் வேலைவாய்ப்பு, மருத்துவ முகாம், CSR நிதியினை உள்ளூர் மக்களுக்கு பயன் பெற வழிவகை செய்திட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். |
| **7.** | திரு. M சுதாகர், செயலாளர்,<br>தி/ள் இன்டக்ரேடட் உமன்<br>டெவலப்மெண்ட் வெல்பேர் சொசைட்டி,<br>பதிவு எண். 350/1996<br>UCO நகர், முதுகூர் ரோடு, 16th டிவிசன்,<br>நெல்லூர் மாவட்டம், -<br>ஆந்திர பிரதேசம் – 524 003. | இவர் முன்மொழியப்பட்ட திட்டத்திற்கு தனது ஆதரவைத் தெரிவித்ததுடன், பசுமை அபிவிருக்தி எய்திடவும், திட்டத்தின் இளைஞர் வேலைவாய்ப்பு, மருத்துவ முகாம், CSR நிதியினை உள்ளூர் மக்களுக்கு பயன் பெற வழிவகை செய்திட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். |
| **8.** | திரு. D. மலர்தவன், மாவட்ட<br>ஒருங்கிணைப்பாளர்,<br>தி/ள் பாரதிய நாகரிக சேவா சங்கம்,<br>எண். 43/15 புதுமணி குப்பம், 4வது தெரு,<br>ராயபுரம், சென்னை – 600 013. | |
| **9.** | திரு. M முத்து ராஜா,<br>மாவட்ட ஒருங்கிணைப்பாளர்,<br>தி/ள் பாரதிய நாகரிக சேவா சங்கம்,<br>பதிவு எண். 301/2009<br>4, பெருமாள் நகர் ஸ்டிரீட், கமுதி,<br>ராமநாதபுரம் மாவட்டம் – 623 603. | |
| **10.** | திரு. A.P. ராஜேந்திரன், | |

| | | |
|---|---|---|
| | நிறுவனர் மற்றும் தலைவர்,<br>தி/ள் பாரதிய நாகரிக சேவா சங்கம்,<br>பதிவு எண். 301/2009<br>கிருஷ்ணகிரி காலணி, அன்ஜிமேடு<br>அஞ்சல், எர்பேடு மண்டல், திருப்பதி<br>மாவட்டம் - 517619. | இவர்கள் முன்மொழியப்பட்ட திட்டத்திற்கு தனது ஆதரவைத் தெரிவித்ததுடன், மொத்த வருவாயில் 10 சதவீதம் இங்குள்ள உள்ளூர் மக்களுக்கான வளர்ச்சி திட்டங்களுக்கு பயன்படுத்துமாறு கேட்டுக் கொண்டார். கிராமப்புற ஏழை படித்த மற்றும் படிப்புற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கி அவர்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்துமாறு கேட்டுக் கொண்டுள்ளார். |
| 11. | திரு P முத்துக்குமரன்,<br>மாவட்ட ஒருங்கிணைப்பாளர்,<br>தி/ள் பாரதிய நாகரிக சேவா சங்கம்,<br>பதிவு எண். 301/2009<br>169, வடக்குத் தெரு, கணிசப்பாக்கம்,<br>பண்ரூட்டி வட்டம்,<br>கடலூர் மாவட்டம் - 607 106. | |
| 12. | திரு V மணிகண்டன்,<br>நகர ஒருங்கிணைப்பாளர்,<br>தி/ள் பாரதிய நாகரிக சேவா சங்கம்,<br>பதிவு எண். 301/2009<br>7, ரசாக் லே அவுட், 4 வது தெரு,<br>கீழ்ப்பெரும்பாக்கம்,<br>விழுப்புரம் மாவட்டம் - 605 602. | |
| 13. | திரு V சுரேஷ்,<br>நகர துணை ஒருங்கிணைப்பாளர்,<br>தி/ள் பாரதிய நாகரிக சேவா சங்கம்,<br>பதிவு எண். 301/2009<br>7, ரசாக் லே அவுட், 4 வது தெரு,<br>கீழ்ப்பெரும்பாக்கம்,<br>விழுப்புரம் மாவட்டம் - 605 602. | |
| 14. | திரு M சிவநாதன்,<br>மாவட்ட ருங்கிணைப்பாளர்,<br>தி/ள் பாரதிய நாகரிக சேவா சங்கம்,<br>பதிவு எண். 301/2009 | |

| | | |
|---|---|---|
| | 7, ரசாக் லே அவுட், 4 வது தெரு,<br>கீழ்ப்பெரும்பாக்கம்,<br>விழுப்புரம் மாவட்டம்- 605 602. | |
| 15. | திரு. B. சுப்பாராமையா,<br>செயலாளர் மற்றும் இயக்குநர்,<br>ரூரல் அப்லிப்ச்மண்ட் நெட்வொர்க்<br>சொசைட்டி, NGO, திருப்பதி. | இவர் முன்மொழியப்பட்ட திட்டத்திற்கு தனது ஆதரவைத் தெரிவித்ததுடன், பசுமை அபிவிருக்தி எய்திடவும், திட்டத்தின் உரிமையாளர் முறையாக காற்று மாசு தடுப்பு சாதனைங்களை பயன்படுத்தி இயக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். |
| 16. | திருமதி. வனிதா சௌந்தர்,<br>ஊராட்சி மன்றத் தலைவர்,<br>நல்முக்கல் ஊராட்சி,<br>மரக்காணம் வட்டம்,<br>விழுப்புரம் மாவட்டம். | இத்திட்டம் அமைந்தால் உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைப்பது மட்டுமல்லாமல் கட்டுமான பொருட்கள் மலிவு விலையில் எங்கள் ஊரில் உள்ள மக்களுக்கு கிடைக்கும் என்று கூறி தங்களது ஆதரவை தெரிவித்தார்கள். |
| 17. | திரு. பார்த்திபன்,<br>கீழ்அருங்குணம் கிராமம்,<br>பெருமுக்கல் அஞ்சல்,<br>மரக்காணம் வட்டம்,<br>விழுப்புரம் மாவட்டம். | |
| 18. | திரு. சிவா,<br>சேனலூர் கிராமம்,<br>குன்னப்பாக்கம் அஞ்சல்,<br>மரக்காணம் வட்டம்,<br>விழுப்புரம் மாவட்டம். | |
| 19. | திரு. மணிகண்டன்,<br>கீழ்அருங்குணம் கிராமம்,<br>பெருமுக்கல் அஞ்சல்,<br>மரக்காணம் வட்டம்,<br>விழுப்புரம் மாவட்டம். | |
| 20. | திரு. முரளி,<br>சேனலூர் கிராமம்,<br>குன்னப்பாக்கம் அஞ்சல்,<br>மரக்காணம் வட்டம்,<br>விழுப்புரம் மாவட்டம். | |
| 21. | திரு. பிரவீன் குமார்,<br>கீழ்அருங்குணம் கிராமம்,<br>பெருமுக்கல் அஞ்சல்,<br>மரக்காணம் வட்டம்,<br>விழுப்புரம் மாவட்டம். | |

| | | |
|---|---|---|
| 22. | திரு. நந்த குமார்,<br>கீழ்அருங்குணம் கிராமம்,<br>பெருமுக்கல் அஞ்சல்,<br>மரக்காணம் வட்டம்,<br>விழுப்புரம் மாவட்டம். | |
| 23. | திரு. R.சுரேஷ்,<br>சேனலூர் கிராமம்,<br>குன்னப்பாக்கம் அஞ்சல்,<br>மரக்காணம் வட்டம்,<br>விழுப்புரம் மாவட்டம். | |
| 24. | திரு. காளிதாஸ்,<br>பெருமுக்கல் கிராமம் மற்றும் அஞ்சல்,<br>மரக்காணம் வட்டம்,<br>விழுப்புரம் மாவட்டம். | |
| 25. | திரு. சிவலிங்கம் த.பெ. பெருமாள்,<br>வடநெற்குணம் கிராமம் மற்றும் அஞ்சல்,<br>மரக்காணம் வட்டம்,<br>விழுப்புரம் மாவட்டம். | |
| 26. | திரு. கண்ணன் ,<br>அழகியபாக்கம் கிராமம்,<br>பெருமுக்கல் அஞ்சல்,<br>மரக்காணம் வட்டம்,<br>விழுப்புரம் மாவட்டம். | |
| 27. | திரு. கணேசன்,<br>பெருமுக்கல் கிராமம் மற்றும் அஞ்சல்,<br>மரக்காணம் வட்டம்,<br>விழுப்புரம் மாவட்டம். | |
| 28. | திரு. ஜெயசீலன்,<br>பெருமுக்கல் கிராமம் மற்றும் அஞ்சல்,<br>மரக்காணம் வட்டம்,<br>விழுப்புரம் மாவட்டம். | |

**பின்னர் கருத்துக்கள் எதுவும் பெறப்படவில்லை.**

இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விழுப்புரம், திட்டம் குறித்த பொதுமக்களின் கருத்துகள், ஆலோசனைகளின் சுருக்கத்தை கூறினார். மேலும், இப்பொதுமக்களின் கருத்துகள், ஆலோசனைகள் ஆகியவை தொகுத்து, வீடியோ கிராஃபி மூலம் பதிவு செய்யப்பட்டு, மாநில சுற்றுச்சூழல் மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என்றும் தெரிவித்தார். பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட எழுத்துப்பூர்வ கருத்துக்களையும் இதனுடன் சேர்த்து அனுப்பப்படும் என்று குறிப்பிட்டார்.

மேலும் மேற்குறிப்பிட்ட செய்தித்தாளில் வெளியிடப்பட்ட பொது அறிவிப்பின்படி, இப்பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் நடவடிக்கை குறிப்பின் நகலானது பொது மக்களின் பார்வைக்காக விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் - விழுப்புரம், மரக்காணம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம், மரக்காணம் தாலுகா அலுவலகம், நல்முக்கல் கிராம ஊராட்சி அலுவலகம், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விழுப்புரம் ஆகிய இடங்களில் வைக்கப்படும், மேலும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய இணையதளமான www.tnpcb.gov.in ல் வெளியிடப்படும். நடவடிக்கை குறிப்பின் மீதான கருத்துக்கள் ஏதேனும் இருந்தால், உறுப்பினர் செயலர், மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் -தமிழ்நாடு / MoEF&CC மற்றும் சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரருக்கும் நேரடியாக அனுப்பலாம் என்று மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விழுப்புரம் கூறினார்.

17/7/25

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
விழுப்புரம்.

17/07/25

சார் ஆட்சியர்(கூ.பொ).,
திண்டிவனம்

17/07

**<u>இதுதவிர கீழ்கண்ட விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.</u>**

1. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்ட விவரம் பத்திரிக்கை வெளியீட்டின் நகல் (தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளேடுகள், நாள். 11.06.2025).
2. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு கலந்து கொண்டர்களின் வருகை பதிவேடு (16 பக்கங்கள் 82 நபர்கள்)
3. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் ஒலி மற்றும் ஒளிப்பட பெண்டிரைவ்.
4. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு.
5. திட்ட நிறுவனத்தாரால் சமர்பிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை மற்றும் திட்ட சுருக்கம் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).
6. பொதுமக்கள் தன்னார்வ தொண்டு நிறுவனம் / சுற்றுச்சூழல் ஆர்வலர்களிடமிருந்து மின்னஞ்சல், அஞ்சல் மற்றும் பொது மக்கள் கருத்துகேட்பு கூட்டத்தில் பெறப்பட்ட 28 மனுக்கள்.